பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 01 | புதன்கிழமை | 15.05.2024 | அதிர்வு 288

## வனப் பகுதியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

நுவரெலியா, லவர்சீலிப் பகுதியிலுள்ள வனப் பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நுவரெலியாப் பொலிஸாருக்குக் கிடைக்க பெற்ற தகவல்களுக்கமைய 06

### நினைவேந்தல் நிகழ்வை எவரும் தடுக்கவே முடியாது



# தமிழரை ஏறி மிதித்தால் கோட்டாவின் நிலையே ரணிலுக்கும் ஏற்படும்!

### சம்பந்தன் கடும் எச்சரிக்கை

(சீ.ஏ.தமிழ்மாறன்)

"இறுதிப் போரில் உயிர்நீத்த தமது உறவுகளை நினைவேந்தத் தமிழ் மக்களுக்கு முழுமையான உரிமை உண்டு. அதனால்தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நடத்தி வருகின்றார்கள். அந்த நிகழ்வை எவரும் தடுக்கவே முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சொல்லிவைக்க விரும்புகின்றேன். இதனையும் மீறி நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை ஏற்படுத்தித் தமிழர்களை ஏறி மிதித்தால் கோட்டாபயவின் நிலைதான் ரணிலுக்கும் ஏற்படும்." 07

# பலஸ்தீனத்தில் நடப்பதுதான் இங்கும் தமிழருக்கு நடந்தது!

### நாடாளுமன்றத்தில் சுமந்திரன் சாட்டை ஏன் இரட்டை வேடம் எனவும் அவர் கேள்வி

(சுடர் திலீபன்)

"பலஸ்தீனத்தில் இடம்பெறும் இனப்படுகொலைதான் இலங்கையில் தமிழர்களுக்கும் நேர்ந்தது. பலஸ்தீனத்துக்குக் குரல் கொடுக்கும் இலங்கை, தமிழர்களுக்கு என்ன செய்தது? இதுதான் இலங்கையின் நயவஞ்சகத்தன்மை மற்றும் இரட்டை வேடம். பலஸ்தீனத்தின் மீது அக்கறை கொண்டுள்ளீர்கள். அந்த அக்கறை எங்கள் மக்கள் மீது இல்லையா? என்று கேட்கின்றேன். பலஸ்தீன விடயத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலும், சர்வதேசத் தலையீடு அவசியம் என்றும் கூறும் இலங்கை, எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கூறும்போது உள்ளக விவகாரம் என்று கூறுவது ஏன்?."

- இவ்வாறு சபையில் கேள்விக்கணைகளைத் தொடுத்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். 06




## அரசின் கோர முகத்தைத் துகிலுரித்து அப்பாவிகளை விடுவிக்கத் திரள்வோம்

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறைகூவல்



(எஸ்.நிதர்ஷன்)

நினைவுகூரல் உரிமையை மறுதலித்து மூன்று பெண்கள் உட்பட நான்கு தமிழர்களைக் கைது செய்த சம்பவத்துக்கு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வன்மையான கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் 07




பலஸ்தீன நிலைமையை ஒட்டி நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரமுகர் எம்.ஏ.சுமந்திரன் ஆற்றிய உரையில் நான் அவதானித்த நான்கு விடயங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது என நினைக்கிறேன்.

முதலாவது – பாலஸ்தீன நிலைமையை இங்கு இலங்கையில் இடம் பெற்ற ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதலுடன் அவர் ஒப்பிட்டமை. 06








# பாரம்பரிய தோட்டத் தொழிற்துறைக்குப் பதிலாக புதிய விவசாய வர்த்தகத்துறை நாட்டிற்கு அவசியம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“பாரம்பரிய பெருந்தோட்டக் கைத்தொழிலுக்குப் பதிலாக புதிய விவசாய வர்த்தகத் துறையொன்றை நாட்டில் உருவாக்கி, நாட்டைப் பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதுருகிரிய தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் புதிய கல்வி மற்றும் நிர்வாக கட்டிடத்தை நேற்று காலை திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“நமது விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் இத்தகைய நிறுவனங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரம் இன்று மீண்டும் கட்டியெழுப்பப்படுகிறது. விவசாயத்தின் மூலம் இந்த நிலையை அடைய வாய்ப்புக் கிடைத்தது.

நான் நாட்டைப் பொறுப்பேற்றபோது, நாட்டில் விவசாய உற்பத்தி தடைப்பட்டிருந்தது. மேலும், ஐரோப்பிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால், நமது ஆடைத் தொழிலுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் இருக்கவில்லை.

எனவே முதலில் இந்த நாட்டில் நெற்பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்ய பாடுபட்டோம். 2022, 2023 இல் சிறுபோகம் மற்றும் 2023 இல் பெரும்போகத்தில் வெற்றியளித்ததன் காரணமாக, இந்த திட்டத்தைத் தொடர எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதன்படி, விவசாயத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டது என்றே கூற வேண்டும்.

இப்போது இந்த நாட்டுக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும் ஏனைய தனியார் கடன் வழங்குநர்களுடனும் பேச்சு நடத்தி வருகிறோம். முதல்கட்ட பேச்சு முடிந்த பிறகு, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் சவாலை எதிர்கொள்ள வேண்டும். மேலும் நாம் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த வேண்டும். கடனை அடைக்க எங்களுக்கு கால அவகாசம் மட்டுமே கிடைத்துள்ளது. எனவே, அதிலிருந்து விடுபடுவது சாத்தியமில்லை. மேலும் நாம் எப்போதும் கடனில் வாழ முடியாது. எனவே நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இந்த நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான சட்ட வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இப்போது நாம் இந்தத் திட்டத்தை முன்னோக்கிச் செயல்படுத்த வேண்டும்.

வரலாற்று ரீதியாக நமது விவசாயம், ஏற்றுமதி விவசாயமாக மாறிவிட்டது. சிங்கள மன்னராட்சியின் போது தானியங்கள் பயிரிடப்பட்டன. மேலும், ஈர மண்டலத்தில் வாசனைப் பொருள்கள் பயிரிடப்பட்டன. வெள்ளையர்களின் வருகைக்குப் பின் தேயிலை, தென்னை, இறப்பர் என்பன பயிரிடப்பட்டன. ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு நாம் ஒரு நாடாக முன்னேறவில்லை. சுதந்திரத்திற்குப் பின்னர் டி.எஸ்.சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் நாம் அரிசியில் மட்டுமே தன்னிறைவு அடைய முடிந்தது.

இப்போது நாட்டில் விவசாயத்தை நவீனமயமாக்கவும், ஏற்றுமதி விவசாயத் தொழிலை மேம்படுத்தவும் தேவையான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம். தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆகியவை நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பயிர்களாக மாறியுள்ளன.

வெள்ளையர்கள் விரட்டப்பட்டு தோட்டங்களை நாம் கையகப்படுத்தியதால் அவர்கள் கென்யாவில் தேயிலை உற்பத்தியை ஊக்குவித்து எமக்கு போட்டியாக செயற்படுகின்றனர். வியட்நாமும் இறப்பர் செய்கையை மேம்படுத்தி இலங்கையுடன் போட்டியிடுகிறது. எனவே, இந்தப் போட்டியை எதிர்கொள்ளும் வகையில் தோட்டத் தொழிலை மாற்றியமைக்க வேண்டும்.


தற்போது விவசாயத்தைப் பலப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அதனால் நாம் தோட்டங்களை விவசாய வர்த்தகமாக மாற்றி உற்பத்தியை பலப்படுத்த வேண்டும். தேயிலை மற்றும் இறப்பர் செய்கையை ஊக்குவிக்க வேண்டும். அதற்கான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்று எமது தேயிலை தொழில் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. பல நிறுவனங்கள் அதனை சாதகமாக செய்கின்றன.

நாட்டின் பாரம்பரிய பயிர் உற்பத்தியைப் பலப்படுத்த வேண்டும். நமது நாடு கோகோவா, கருவா மற்றும் ஏனைய மசாலாப் பொருள்களையும் மீண்டும் நடுகை செய்ய வேண்டும். புதிய பயிர்களை விளைவிக்க வேண்டும். அதற்காக இத்துறைக்கு புதிய தொழில்நுட்ப முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்த வேண்டும். இரண்டாவதாக, உற்பத்தியை அதிகரிக்க சிறு தோட்ட உரிமையாளர்களையும் இந்த நவீனமயமாக்கல் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

விவசாயத்தை மேம்படுத்தினால் மட்டுமே கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிக்க முடியும். எனவே தற்போதுள்ள பயிர்கள் மற்றும் காணிகளையும் சிறந்த முறையில் பயன்படுத்தி 05 இலட்சம் ஏக்கர் புதிய காணியில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். அதற்கு நவீன விவசாயமும், நவீன விவசாய வர்த்தகமும் அவசியம். இந்த நாட்டில் விவசாயத்தை முக்கிய ஏற்றுமதி துறையாக மாற்ற வேண்டும்.

எதிர்காலத்தில் இலங்கையை சூழவுள்ள நாடுகளின் சனத்தொகை பல பில்லியன்களால் அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. பெருகிவரும் உலக மக்கள் தொகைக்கு உணவுச் சந்தையை வழங்க நாம் தயாராக இருக்க வேண்டும். பழைய தோட்டத் தொழிலுக்குப் பதிலாக புதிய விவசாய வியாபாரத்தை உருவாக்கி நாட்டை பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும். புதிய சட்டத்தின் ஊடாக நிறுவனங்களுக்கு இடையில் போடப்பட்டிருக்கும் தடைகள் அனைத்தையும் நீக்கி சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சூழலை உருவாக்க எதிர்பார்க்கிறேன்.”– என்றார்.













# உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட கைதி அதைக் கைவிடுவதற்கு இணக்கம்

## கஜேந்திரன் எம்.பி. தகவல்



(ந.லோகதயாளன்)

சிறையில் உள்ள ஆனந்தவர்ணனின் உடல் நிலை கருதி உணவு தவிர்ப்பில் ஈடுபடுவதனை நிறுத்துமாறு விடுத்த கோரிக்கையை அவர் ஏற்றுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு விளக்க மறியல் சிறைச்சாலையில் தடுத்து வைத்துள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகளை நேற்றுப் பார்வையிட்ட பின்பு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

செல்வநாயகம் ஆனந்தவர்ணன், தம்பு குணசேகரம், செ.சுதாகரன்ஆகியோரை சிறையில் பார்த்தேன். தம்பு குணசேகரத்தௌ சிறைச்சாலையில் உள்ள வைத்திய சாலையில் வைத்தே பார்வையிட்டேன் .

இதேநேரம் ஆனந்தவர்ணன் தொடர்ந்தும் உணவு தவிர்ப்பில் ஈடுபடுகின்றமையால் மிகவும் மோசமாக பலவீன மடைந்திருந்தார். என்னைப் பார்வையிட வரும்போதும் நடக்க முடியாது தள்ளாடியபடியே வருகை தந்தார். அதனால் நான் ஓர் கோரிக்கையை விடுத்தேன். அரசு கண்டுகொள்வதாக இல்லை, அதனால் மேலும் உண்ணாவிரதம் இருந்து உடல்நிலை ஆபத்தாக மாறுவதனைவிட உண்ணாவிரதத்தை நிறுத்துங்கள், சட்டத்தரணிகள் ஊடாக விடுதலைக்கான முயற்சிகளை செய்ய முடியும் எனக் கேட்டுக்கொண்டேன்.

அதற்கமைய உணவு தவிர்ப்பை கைவிட இணங்கியுள்ளார். விடுதலைக்கான நடவடிக்கையுடன் அதுவரை மகசீன் சிறையில் உள்ள சக கைதிகளின் இடத்திற்கு மாற்ற வேண்டும் எனவும் கோரியுள்ளார். இவற்றோடு சிறைச்சாலை அதிகாரயிடம் இவர் சிறைச்சாலை ஆணையாளரைச் சந்திக்க விரும்புகிறார் எனவும் கூறியுள்ளேன். இதற்கு ஆணையாளரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் 65 வயதுடைய தம்பு குணசேகரம் கடந்த டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்டு அடுத்த தவணை எப்போது என்றே தெரியாது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். முள்ளந்தண்டு பாதிப்புடன் இடுப்பு வலியினால் அவதியுறும் அவர் தங்கியுள்ள இடத்தில் போதிய இட வசதியின்றி நெரிசலான இடத்திலேயே உள்ளார். இதனைவிடவும் அவரது உடலில் பல காயங்கள் உள்ளபோதும் அவற்றிற்கான உரிய சிகிச்சை அளிக்கப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. உடல்நிலை கருதி மருத்துவத்திற்குச் சென்றால் அங்கே தாக்க முற்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. – என்றார்.

# அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்த செயற்பாடுகள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்ப்பணிப்பையும் டொனால்ட் லூ பாராட்டினோர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க , ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொழும்பகே உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

# பொது வேட்பாளராக போட்டியிடுமாறு சுமந்திரனை நான் கேட்கவேயில்லை!

## அப்பட்டமான பொய் என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்




"ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுமாறு எம்.ஏ.சுமந்திரனை நான் கேட்கவில்லை. இது வெறும் அப்பட்டமான பொய். அது அவரது அதீதமான கற்பனையின் வெளிப்பாடு,"

– இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கோப்பாயில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இன்று ஊடகங்களில் ஒரு செய்தி வெளி வந்திருக்கிறது. சுமந்திரனிடம் ஜனாதிபதி தமிழ் மொது வேட்ப்பாளராக போட்டியிடுமாறு யாராவது உங்களிடம் கோரினார்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு வர் கூறியிருக்கின்றார்.

அதில், உத்தியோகபூர்வமாக யாரும் தன்னிடம் கேட்கவில்லை. இருந்த போதும், சுரேஷ் பிரேமச்சந்திரன் தன்னைச் சந்தித்து நீங்கள் நிற்பீர்களா என்று என்னிடம் கேட்டார் எனவும் தான் அதை மறுத்தார் எனவும் அவர் சொல்லியிருக்கின்றார்.

அது ஒரு உண்மையான விடயம் அல்ல. ஒரு சில மாதங்களுக்கு முன்பாக ஒரு பொது வேட்ப்பாளர் தொடர்பாக கருத்தை அவரிடம் கேட்டிருந்தேன் என்பது உண்மை. பொது வேட்பாளரது தேவையைப் பற்றி நான் கூறியிருந்தது மாத்திரமல்ல அவரது கருத்தையிம் நான் கேட்டருந்தேன் என்பது உண்மை.

அந்த வேளையில், யார் வேட்பாளர் என்பது பற்றி நாங்கள் யோசிக்கவேயில்லை. அவ்வாறான வேளையில் நான் அவரைப் போய் பொது வேட்ப்பாளராக நில்லுங்கள் என்று நான் கேட்டேன் என அவர் கூறியிருப்பது, ஓர் அதீதமான கற்பனையின் வெளிப்பாடோ என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆனால், அவ்வாறான ஒரு விடயத்தை நான் அவரிடம் கேட்கவில்லை என்பதை முதலாவதாக நான் மக்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் பொது வேட்பாளர் தேவை என்பதில், ஈ.பி.ஆர்.எல்.எவ். மிகத் தெளிவாக இருக்கின்றோம்.

ஆகவே நான் சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரனிடம் நீங்கள் நில்லுங்கள் என்று கேட்டேன் எனக் கூறுவது இந்தப் பேச்சுக்களை, கலந்துரையாடல்களை குழப்புவதற்கான முயற்சியாக் கூட இருக்குமோ என்று நான் சிந்திக்கின்றேன்.

இவ்வளவு ஒரு குறுகிய நோக்கங்களை, சிந்தனைகளைக் கொண்டவராக இருக்கக் கூடாது என்பதும் எனது வேண்டுகோளாக இருக்கிறது. ஆகவே நடக்காத அல்லது பேசப்படாத விடத்தை பேசினேன் என்று அவர் சொல்லவது ஏற்புடைய விடயம் அல்ல. என்னும் குறிப்பாகச் சொல்வதாக இருந்தால் தமிழ் பொது வேட்பாளர் என்பது சுமந்திரனை விட பக்குவமான விசயங்களைக் கையாளக் கூடிய பல பேர் என்னைப் பொறுத்தளவில் கட்சிகளிலும் இருக்கின்றார்கள். அரசியல் கட்சிகளுக்கும் வெளியேயும் இருக்கின்றார்கள்.

எம்மைப் பெறுத்த வரையில் ஆரம்பத்தில் இருந்து ஒரு பொது வேட்ப்பாளர் என்பவர் கட்சி சாராதவராக இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றோம். அந்த அடிப்படையில் பார்த்தால் கூட அவ்வாறான ஒரு கோரிக்கையை சுமந்திரனிடம் நான் வைக்கத் தேவையில்லை. ஆகவே அவ் விடயத்தில் அவர் ஒரு தவறான, பிழையான கருத்தைக் கூறியிருக்கிறார் என்பதை நான் வெட்ட வெளியில் மக்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்."– என்றார்

# தமிழீழம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் தென்பகுதி காசாவாக மாறியிருக்கும்

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



தமிழீழம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் தெற்காசியாவின் காசாவாக இலங்கையின் தென்பகுதி மாறியிருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனப் பிரச்சினை தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமினால் முன்வைக்கப்பட்டது.

மேற்படி பிரேரணை மீதான விவாதத்தின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசியப் பிரச்சினையை, பாலஸ்தீன பிரச்சினை போல இலங்கை அரசாங்கம் கருத வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்கம் எமது நாட்டில் உள்ள பிரச்சினையைத் தீர்க்க முற்படாமல் பாலஸ்தீன பிரச்சினையை தீர்க்க முற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹாரிஸ், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு பாதுகாப்பு சபையின் வீட்டோ அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

INDSRI FERRY

# தாமதத்திற்கு வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத சில சட்டரீதியான அனுமதிகள் காரணமாகவும், தாமதமான கப்பலின் வருகையினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை 13/05/2024 முதல் 16/05/2024 இயக்கமுடியவில்லை. சேவையினை 17/05/2024 இல் இருந்து இயக்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர். 13/05/2024 முதல் 16/05/2024 பதிவு செய்த பயணிகளை 17/05/2024 சேவைக்கு மாற்றியுள்ளோம்.

பதிவு செய்த பயணிகள் 17/05/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் அவர்கள் விரும்பிய திகதிகளில் பயணிக்கலாம் அல்லது செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப்பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். செலுத்திய கட்டணத்தினை பெற்றுக்கொள்ளலாம்.



**IndSri Ferry Services Pvt Ltd**
**# 143/1, Uttamar Gandhi Road, Opp The Park Hotel,**
**Thousand Lights West, Nungampakkam,**
**Chennai - 600034, Tamil Nadu, India.**

ANDROID APP ON Google play | Download on the App Store

W: www.sailindsri.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"நாடுகளில் சில தலைவர்களின் மக்கள் செல்வாக்கு – ஆதரவு – அவர்களுக்கு சரிகின்ற போது அதனை ஈடு கட்டுவதற்கு நாட்டுக்கு தேசிய எதிரி ஒருவர் அந்தத் தலைவருக்கு தேவைப்படுகின்றார்" என்று சுமந்திரன் குறிப்பிட்டு, விடயங்களைக் குறிப்பால் உணர்த்தினார்.

இஸ்ரேல் ஆட்சியாளர் தமது செல்வாக்கை வளர்ப்பதற்கு நாட்டுக்கு எதிரியான ஹமாஸ் என்று தரப்பை சாதகமாக பயன்படுத்திக் கொண்டார் என்ற சாரப்பட குறிப்பால் காட்டும் சுமந்திரன், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் விளைவாக அரசியல் செல்வாக்கு ஈட்டி, அதிகாரத்துக்கு வந்த தரப்பைச் சொல்லாமல் சொல்லுகின்றார். இவ்வாறு அதிகாரத்தை ஈட்டும் மார்க்கம் மிகவும் இழிவானது என்றும் சுமந்திரன் சுட்டினார்.

அடுத்தது – "இஸ்ரேல் ஈவிரக்கமற்ற முறையில் பலஸ்தீனம் மீது நடத்தும் தாக்குதலை இந்த நாட்டிலும் பலர் ஆதரிக்கிறார்கள், அவர்களில் அதிகமானோர் இந்த நாட்டின் கிறிஸ்தவ திருச்சபையைச் சேர்ந்தவர்கள். நான் ஒரு கிறிஸ்தவனாக இருந்து கொண்டு அதை விமர்சிக்கின்றேன்" என்று கிறிஸ்தவத் தரப்பையும் சுமந்திரன் 'ஸேம் சைட் கோல்' அடித்து, ஒரு பிடி பிடித்தார்.

மூன்றாவது – சம்பூரில் முள்ளி வாய்க்கால் கஞ்சி விநியோகத்துக்கு எதிராகத் தடை உத்தரவு கொடுத்த நீதிவான் குறித்து அவர் கொடுத்த சாட்டையடிக் கருத்து. "அந்த நீதிவான் இப்படி ஓர் உத்தரவை எப்படி கொடுத்தார் என்பதை என்னால் நம்ப முடியாமல் இருக்கின்றது" – என்று குறிப்பிட்டதன் மூலம் அந்த நீதிவானை அவர் நாடாளுமன்றத்தில் மறைமுகமாக வைத்தார்.

நான்காவது – நேற்று அந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை கொண்டு வந்து பிரேரித்த ரவூப் ஹக்கீமுக்கு சுமந்திரன் கொடுத்த சாட்டை.

"அரச பயங்கரவாதம் என்றால் எமக்கு – தமிழர்களுக்கு – நன்கு தெரியும். நாங்கள் அதன் கொடூரத்தை அனுபவித்தவர்கள், அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள். நாங்கள் பலஸ்தீன மக்களுடன் உணர்வு ரீதியாக நிற்கிறோம். இந்த நாட்டின் நீதி அமைச்சராக இருந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் எங்களுக்கு – தமிழர்களுக்கு – எதிராக இலங்கை அரசின் பயங்கரவாதத்தை மூடி மறைத்து நியாயப்படுத்தியவர் தான் ஹக்கீம். இப்போது இங்கு வந்து இஸ்ரேல் தலைவர் நெத்தனியாகுவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்கிறார் அவர். ஏன் மஹிந்த ராஜபக்ஷவை நிறுத்தக்கூடாது? ஏன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நிறுத்தக்கூடாது? இந்த வன்முறைகளை இழைத்த தரப்பில் கட்டளை சங்கிலியில் பொறுப்பாக இருந்தவர்களை ஏன் நிறுத்தக்கூடாது?" – என்று கேட்டார் சுமந்திரன்.

நிச்சயமாக சுமந்திரனின் இந்தக் கேள்விகளுக்கு ரவூப் ஹக்கீமிடம் "அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பு" என்ற சமாளிப்புப் பதில் தவிர வேறு நியாயம் ஏதும் இல்லை என்பது மட்டும் எனக்கு தெரியும்.

## பலஸ்தீனத்தில் நடப்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பலஸ்தீன விவகாரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பலஸ்தீனத்தின் இன்றைய நிலைமை மிகவும் பாரதூரமானதுடன், கவலைக்குரியது. இந்த நிலைமையை எவரும் அலட்சியப்படுத்தக்கூடாது.

இந்நிலையில் இந்த நாடாளுமன்றத்தில் இருதலைப்பட்சமாக நடந்து கொள்பவர்களும் இருக்கின்றார்கள். அவர்களின் செயற்பாடு நயவஞ்சகமானவை.

மனித உரிமைகள், சர்வதேச மனித உரிமை சட்டங்கள், இனப்படுகொலை உள்ளிட்ட சர்வதேச குற்றங்கள் தொடர்பில் அவர்கள் பேசுகின்றனர். ஒரு நாட்டுக்குள் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிட்டு பலஸ்தீன நிலைமை குறித்துப் பேசுகின்றனர்.

பலஸ்தீனத்தில் அதிகளவான மக்கள் கொல்லப்படுகின்றார்கள். இவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களும் பெண்களும் உள்ளனர்.

இந்த யுத்தத்தைப் பொறுத்தவரையில் ஹமாஸ் – இஸ்ரேல் இடையேயான மோதலாகும். இலங்கையிலும் இது போன்ற நிலைமை ஏற்பட்டது. அதனை உள்விவகாரம் என்றும், சர்வதேச குற்றச் செயல் அல்ல என்றும் கூறியவர்கள் பலஸ்தீன சம்பவத்தை உள்விவகாரம் என்று கூறுவதில்லை.

மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டனர். அந்த மக்களை நினைவுகூரும் வாரமாக இந்த வாரம் இருக்கின்றது.

போர் வலயத்துக்குள் 4 இலட்சம் மக்கள் சிக்கியிருந்தனர். அவர்கள் உண்ண உணவின்றி உப்பில்லா கஞ்சியையே அருந்தினார்கள். இதனை நினைவுகூரும் வகையில் அங்கு கஞ்சி பரிமாறப்படுவது வழக்கமாகும். இலங்கையில் யுத்தத்தில் ஏற்பட்ட மக்கள் இழப்புகளை நினைவுகூரும் நாளாகவே இதனைப் பார்க்கின்றோம்.

எமது மக்கள் இறுதிக்கட்ட போர்க் காலத்தில் கஞ்சியைக்கூடப் பெற்றுக் கொள்ள முடியாமல் போராடினார்கள். இதனை நினைவுகூர இடமளிக்காமை தமிழர்களின் அவல நிலைமையையே எடுத்துக்காட்டுகின்றது.

இந்த விடயத்தில் சம்பூரில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்ட முறையைப் பார்த்தோம். பெண் ஒருவர், இரு ஆண் பொலிஸாரால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

கஞ்சியைப் பரிமாறியமைக்காகவே அவரை இழுத்துச் செல்கின்றனர். கஞ்சி விவகாரத்தில் பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாகத் தடை உத்தரவுகளையும் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்த நேரத்தில் பலஸ்தீனத்தில் இறக்கும் மக்கள் தொடர்பில் பேசிக் கொண்டு இருக்கின்றோம். ஆனால், இங்கே இறந்தவர்கள் தொடர்பில் நிலைப்பாடு என்ன என்று கேட்கின்றோம். இது இரட்டை நிலைப்பாடு இல்லையா? பலஸ்தீனத்தின் மீது அக்கறை கொண்டுள்ளீர்கள். அந்த அக்கறை எங்கள் மக்கள் மீது இல்லையா? என்று கேட்கின்றேன்.

பலஸ்தீன விடயத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலும், சர்வதேசத் தலையீடு அவசியம் என்றும் கூறும் நீங்கள் ஏன் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கூறும்போது உள்ளக விவகாரம் என்று கூறுகின்றீர்கள்.

இது இரட்டை வேடத்தையே காட்டுகின்றது. யுத்தம் என்பது சுத்தமானதாக இருக்க முடியாது. ஒரு சுதந்திரமான விசாரணை அவசியமாகும். ஆனால், இங்கே உள்ளக விசாரணை தொடர்பில் கூறிக் கொண்டு ஒரு தரப்பு விசாரணையை முன்னெடுக்கின்றனர்.

இஸ்ரேல் தாக்குதலை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம். ஆனால், அதே மனச்சாட்சியுடன் இங்கு 15 வருடங்களுக்கு முன்னர் நடந்தவை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இந்நிலையில், உள்ளகப் பொறிமுறை என்று கூறிக்கொண்டு ஏன் இவ்வாறு நயவஞ்சகமாகச் செயற்படுகின்றீர்கள் என்று கேட்கின்றேன்." – என்றார்.

## வனப் பகுதியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அடையாளம் காண முடியாத அளவுக்குச் சிதைவடைந்துள்ளது எனவும், உயிரிழந்தவரின் அங்க அடையாளங்களைக் கொண்டு அவருக்கு 50 தொடக்கம் 60 வயதாக இருக்கலாம் எனவும் சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தினேஷ் ஷாப்டர் கொலை வழக்கு: விரிவான விசாரணைகள் ஆரம்பம்



வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அனைவரையும் கைது செய்வதற்கான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனவெல முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் அறிவிக்கப்பட்டது.

அத்துடன், வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் கையடக்கத் தொலைபேசி தொடர்பில் நீதிமன்ற உத்தரவின் பேரில் கோரப்பட்ட இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில், அந்த இரசாயன பரிசோதனை அறிக்கை தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு நினைவூட்டலை அனுப்புமாறும் மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## தமிழரை ஏறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம், சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியைப் பரிமாறிய மூன்று பெண்கள் உள்ளிட்ட நால்வர் இரவு வேளையில் பொலிஸாரால் அநாகரிகமான முறையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். அதேபோன்று அம்பாறை மாவட்டம், கல்முனையிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வுக்குப் பொலிஸாரால் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் இந்த அராஜகச் செயல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மே மாதம் உணர்வுபூர்வமானது. அவர்கள், இறுதிப் போரில் உயிர்நீத்த தமது உறவுகளை நினைவேந்துவதற்கான புனிதமான மாதமே இந்த மே மாதமாகும்.

அவர்கள் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவேந்துவதற்கு முழுமையான உரித்துடையவர்கள். அவர்களின் அந்த அடிப்படை உரித்தை யாரும் நிராகரிக்கவே முடியாது. அவ்வாறு நிராகரிப்பதற்கு இடமளிக்க முடியாது.

அவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்துவதும், நிராகரிப்பதும் அடிப்படைச் சட்டங்களை மீறுவதாகும். அதே நேரம், திருகோணமலை, சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இரவு வேளையில் அவர்கள் மீது மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்திய பொலிஸார், அவர்களைக் கைது செய்துள்ளார்கள். அம்பாறை, கல்முனையிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வு தடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் இந்த அடாவடிகள் அடிப்படை மனித உரிமை மீறல்களாகும். இந்தவிதமான செயற்பாடுகளை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இது தொடர்பாகக் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியில் பேசியுள்ளேன். கிழக்கில் பொலிஸார் இந்த அராஜகங்களைப் புரிய யார் அதிகாரம் தந்தது என்று அவரிடம் வினவியுள்ளேன். எனது வன்மையான கண்டனங்களை அவரிடம் தெரிவித்துள்ளேன்.

கைது செய்யப்பட்டவர்கள் தாமதமின்றி விடுவிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பகிரங்கமாகக் கோரிக்கை விடுகின்றேன்.” – என்றார்.

# ரணிலின் வெற்றியை தடுக்கவே முடியாதாம்

## சப்ரகமுவ ஆளுநர் நவீன் கூறுகின்றார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்முனைப் போட்டி நிலவும் எனவும், அதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதை எவராலும் தடுக்க முடியாது எனவும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அறிவித்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவும் அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் தேசிய வேட்பாளராகப் போட்டியிடுவார்.

இவர்கள் மூவருமே பிரதான வேட்பாளர்கள், இவ்வாறு ஜனாதிபதி தேர்தலின்போது மும்முனைப் போட்டி நிலவும் என்பதால் எதிர்க்கட்சிகளின் வாக்குகள் சிதறும். இதுவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றி வாய்ப்பாக அமையும். எனவே, ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது.” – என்றார்.

## அரசின் கோர முகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“திருகோணமலை, மூதூரிலுள்ள சேனையூர் பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறியோர் சம்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சி அளிக்கின்றது.

நினைவுகூரல் என்பது ஒவ்வொரு மனிதனும் அடிப்படை உரிமையாகும். உலகளாவிய அனைத்து சர்வதேச சட்டங்களும் அதனை ஆழமாக வலியுறுத்துகின்றன. இந்நிலையில் திருகோணமலை-சேனையூரில் நடைபெற்றுள்ள இந்தச் சம்பவம் மிகுந்த வேதனையை ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது.

சொல்லொணாத் துயர் வலி சுமந்த இந்த நாட்களில் தங்கள் உறவுகளை நினைந்து பிரார்த்திப்பதற்கு அந்த நாட்களில் அவர்கள் பட்ட துயரத்தைக் கஞ்சி பருகி உயிரை பிடித்திருந்த அவலத்தை நீள நினைந்து தாமும் கஞ்சி காய்ச்சி குடிப்பதும் பரிமாறுவதும் குற்றமாக அரச இயந்திரத்தால் பார்க்கப்படுவது இலங்கையில் 15 ஆண்டுகளாகியும் பேரினவாத மனநிலையில் மாற்றம் வராத கொடூர முகத்தின் வெளிப்பாடாகும். இது தொடர்ந்தும் இனங்களிற்கு இடையேயான நல்லெண்ணத்தை ஆழமாக பாதிக்கும் செயற்பாடாகும்.

புனிதமான கோயிலில் உறவுகளை நினைந்து கஞ்சி காய்ச்சிய பெண் பிள்ளைகள் உள்ளிட்டோரை அராஜகமான முறையில் கைது செய்த செயல் மிகுந்த கண்டனத்துக்குரியது

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்து பாரிய எதிர்ப்பை வெளிக்காட்டி அரசின் கோர முகத்தைத் துகிலுரித்து அப்பாவிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் வாழும் மூத்த தலைவர் திருகோணமலையைத் தற்போதும் பிரதிநிதித்துவப்படுத்தும் இரா. சம்பந்தனுடைய மாவட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதும் பிணை கூட வழங்கப்படாமல் பெண் பிள்ளைகள் உள்ளிட்டோர் விளக்கமறியலில் இரு வாரம் வைக்கப்பட்டிருப்பதும் மனதை வருத்துகின்றது.

உடனடியாக அனைத்து தமிழ்த் தேசிய சக்திகளும் இவர்களின் விடுதலைக்கு சகல எத்தனங்களையும் செய்ய வேண்டுவதுடன் அனைத்து முற்போக்கு மற்றும் உலகளாவிய சக்திகளதும் கவனத்தை ஈர்த்து அரசுக்கு அழுத்தத்தை பிரயோகித்து நினைவுகூரலுக்கான உரிமையை உறுதிப்படுத்துமாறும் வலிசுமந்த இந்த நாட்களில் உங்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.” – என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மொட்டு மேடையில் ரணில்

பேரதிர்ஷ்டமாகக் கிடைத்த ஜனாதிபதி பதவியில், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எப்படியும் தொடர வேண்டும் என்ற நப்பாசையில் துடிக்கும் ரணில் விக்கிரமசிங்க, அதற்கான அரசியல் பாதையை - மார்க்கத்தை - தீர்மானிக்க முடியாதவராகத் தடுமாறுகின்றார்.

தேர்தலுக்கு இன்னும் நான்கு மாதங்களே இருக்கின்றன. அப்படி இருந்தும், இன்னும் - இன்றும் - கூட வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் நான் களமிறங்குகிறேன் என உறுதியாக - வெளிப்படையாக - தெளிவாக - பகிரங்கமாக - மக்களுக்கு அறிவிக்க முடியாமல் அவர் அல்லாடுகின்றமை அப்பட்டமானது.

1999 இல் தாம் சந்தித்த தமது முதலாவது ஜனாதிபதி தேர்தலின் போது அவர் கண் வைத்த பதவி அது. 1999 இலும் 2005 இலும் தோல்வி. 2010 இலும் 2015 இலும் வேறு எவரெவருக்கோ எல்லாம் வேட்பாளர் வாய்ப்பை விட்டுக் கொடுக்க வேண்டிய கட்டாயம். 2019 அவர் விரும்பினாலும் வேட்பாளர் நியமனத்தை கட்சி அவருக்கு வழங்கவே இல்லை என்ற ஆதங்கம். 2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் படுதோல்வி. பின் கதவால் நாடாளுமன்றுக்குப் போக வேண்டிய சின்னத்தன நிலைமை.

இப்படிப் படுதோல்விகள் - பின்னடைவுகள் - புறமொதுக்கல்கள் - நிராகரிப்புகள் - போன்றவற்றுக்குப் பின்னர் அரசியல் முகவரியே இல்லாமல் அல்லாடிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அப்போது பதவிக்கு வந்த கோட்டாபயவின் முட்டாள்தனத்தினால் அதிர்ஷ்டம் கதவைத் தட்ட, நீண்ட பல தசாப்த கால கனவு நனவாகியது. 2022 இல் நாட்டின் ஜனாதிபதியானார் அவர்.

அந்த அதிர்ஷ்ட வாய்ப்பைப் பயன்படுத்தி, இன்னொரு முழு ஆட்சிக் காலம் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்து கோலோச்ச அவர் விரும்புகின்றார். ஆனால் அதற்கான மார்க்கம் யாது என்று தேர்ந்தெடுக்க முடியாமல் அவர் அல்லாடுகின்றார். அதுதான் அவரின் தற்போதைய துரதிர்ஷ்ட நிலைமை.

பௌத்த - சிங்களப் பேரினவாதத் திமிர்த்தனத்தையே தனது சித்தாந்தமாகக் கொண்டு, அந்த இனவெறிப் போக்கையே தனது பிரசாரமாக முன்னெடுத்தே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியின் கோட்டாபய பெருவெற்றியீட்டினார்.

அந்தக் கட்சியுடன் அணி சேர்ந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதாயின் மொட்டின் அந்தப் பேரினவாதப் போக்கைத் தாமும் சேர்ந்து முழுமையாக வரித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ரணிலுக்கு. ராஜபக்ஷக்களுடன் தேர்தல் கூட்டணிக்குத் தான் போனால் சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் தன்னை வெறுத்துப் புறமொதுக்குவர் என்பது மட்டுமல்ல, தங்கள் வாக்குகளை தனது பிரதான அரசியல் எதிரியான சஜித் பிரேமதாஸவுக்கு ஒட்டுமொத்தமாக அள்ளிக் கொட்டித் தன்னைக் கவிழ்த்து விடுவர் என்றும் ரணில் அஞ்சுகிறார்.

மொட்டுக் கட்சியின் வாக்குகளையே தமது அடிப்படைத் தளமாகக் கொண்டு களமிறங்க வேண்டிய கட்டாயத்தில் - இக்கட்டில் - மாட்டி இருக்கும் அவர், அதற்காக மொட்டுக் கட்சியின் பேரினவாத வழியில் தன்னை வழிப்படுத்தும் அல்லது அந்தப் பாதையை சுவீகரிக்கும் அழுத்தத்திலும் இருக்கின்றார்.

அவரது அதிகாரத்தில் முன்னர் தாராளமாக அனுமதிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நிலைவேந்தல் விவகாரம் இப்போது பொலிஸாரால் மீண்டும் நெருக்குவாரத்துக்கு உள்ளாக்கப்படுவது கோட்டாபய ஆட்சிக் காலத்தை நினைவு படுத்துகின்றது. அது தேர்தலுக்காக - தென் இலங்கையை வளைத்துப் போடுவதற்காக - மொட்டுக் கட்சியின் சித்தாந்தத்தில் தானும் நிற்பதை வெளிப்படுத்துவதற்காக - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்ந்தெடுக்கும் புதிய பாதையின் - போக்கின் - வெளிப்பாடுதான்.

மொட்டு அணியில் தமது ஐ.தே.கட்சியின் ஒரே ஒரு எம்.பியுடன் பயணிப்பது மோசமானது என்பதால் நிமல் லான்ஸா போன்றோரோடு சேர்ந்து தனது வழிகாட்டலில் தான் அண்மையில் உருவாக்கியுள்ள புதிய அரசியல் கூட்டணியில், இப்போது தங்களை 'ஒரிஜினல்' சு.கவினர் என அடையாளப்படுத்தும் நிமல் ஸ்ரீபால டி சில்வா போன்றோரையும் சேர்த்துக் கொண்டு ஓர் இருபது, இருபத்தியைந்து எம்.பிக்களுடன் மொட்டு மேடைக்குச் செல்ல ரணில் திட்டமிடுகின்றார் என இப்போது கூறப்படுகின்றது.

எது, எப்படியோ மொட்டுவின் மேடையில் இந்தத் தடவை ஏறி, சுமார் 20 ஆண்டுகளுக்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நேரடியாக சந்திப்பது ரணிலுக்குப் புதிய முடிவைத் தராது. 'பழைய குருடி கதவை திறவடி' என்ற பாணியில, தோல்வி தேவதையின் அரவணைப்புப் பார்வைதான் அவருக்கு நிச்சயம் மீண்டும் கிட்டும்.

# ஊழலுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்; பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்



ஊழலுக்கு எதிரான தனது அரசின் கடுமையான நடவடிக்கைகள் தொடரும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

பிஹார் மாநிலம் ஹாஜிபூர் மக்களவைத் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசியல்வாதிகளிடமிருந்து சோதனையின்போது அமுலாக்கத் துறையினர் கைப்பற்றிய 2,200 கோடி ரூபா நாட்டின் ஏழைகளுக்குச் சொந்தமான பணமாகும்.

அமுலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை மத்திய அரசு தவறாக பயன்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன.

எனினும் அரசியல்வாதிகளுக்கு எதிரான சோதனையின் போது மீட்கப்படும் பணம் நாட்டின் ஏழைகளுக்கு சொந்தமானது. இந்த நடவடிக்கைகளை நாம் எப்போதும் நிறுத்தப் போவதில்லை.

ஆட்சியில் இருந்தபோது முறைகேடான பணப்பரிமாற்றம் மற்றும் ஆட்கடத்தலை செய்ய அனுமதித்த காங்கிரஸ் மற்றும் ஆர்.ஜே.டி..போன்ற கட்சிகள் தங்களின் வாக்குவங்கி அரசியலுக்காக முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடுகளை வாரி வழங்கின.

நான் இருக்கும் வரை இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்கப் போவதில்லை.” - என்றார்.

# பிரதமர் மோடி தொழிலதிபர்களுக்காக உழைக்கிறார்; ராகுல் காந்தி விமர்சனம்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அதானி - அம்பானி உள்ளிட்ட சில தொழிலதிபர்களின் நலனுக்காக மட்டும் உழைத்து வருகின்றார் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி விமர்சனம் செய்துள்ளார்.

ரேபரேலியில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே ராகுல் காந்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சில தொழிலதிபர்களின் நலனுக்காக மோடி அரசு 16 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்தது. இது, மகாத்மாகாந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்துக்கு 24 ஆண்டு காலம் ஒதுக்கப்படும் நிதிக்கு சமமாகும்.

அதானி-அம்பானியின் நலனுக்காக மட்டுமே பிரதமர் மோடி அனுதினமும் உழைத்து வருகிறார்.

விவசாயிகள் மற்றும் வேலையில்லா இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஊடகங்கள் புறக்கணித்து வருகின்றன.

இண்டியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஏழை குடும்பங்களின் பட்டியலை தயார் செய்து அவர்களுக்கு ஆண்டுதோறும் 1 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும், சிறு விவசாயிகள் கடன் தள்ளுபடி, குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து, அக்னிவீர் திட்டத்துக்கு பதிலாக பாதுகாப்பு படைகளில் ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர வேலை ஆகிய திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

அத்துடன், வேலையில்லா இளைஞர்களுக்கு பொதுத்துறை நிறுவனங்களில் ஓராண்டு பயிற்சியை வழங்கி, தகுதியின் அடிப்படையில் நிரந்த அரசு வேலை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.” - என்றார் .

# வேட்பு மனுத் தாக்கல் செய்ய முன்னர் பிரதமர் மோடி கங்கையில் பிரார்த்தனை



பிரதமர் நரேந்திர மோடி நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் வாராணசி கங்கைக் கரையில் உள்ள தசாஷ்வமேத் படித்துறையில் பிரார்த்தனை செய்துள்ளார்.

வேத மந்திரங்களுடன் கங்கைக் கரைப் படித்துறையில் ஆரத்தியும் எடுத்து வழிபாடுகளை மேற்கொண்டதுடன், அங்குள்ள கால பைரவர் கோயிலிலும் பிரார்த்தனை செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்தே அவர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.







# ஈரான் - இந்தியா இடையில் ஒப்பந்தம் கைச்சாத்து; தடை விதிக்க நேரும் என அமெரிக்கா எச்சரிக்கை



மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஈரானின் சபாஹர் துறைமுகத்திலுள்ள ஒரு முனையத்தை 10 வருட காலத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்கா, ஈரானுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் எந்தவொரு தரப்பிற்கும் தடைகளை விதிக்க தயங்குவதில்லை என கூறியுள்ளது.

10 வருட காலத்திற்கு ஈரானின் சபாஹர் துறைமுகத்திலுள்ள ஒரு முனையத்தின் நிர்வாகத்தை பெற்றுக்கொள்வதன் ஊடாக இந்தியா தமது அயல் நாடாக பாகிஸ்தானை புறந்தள்ளி, மத்திய ஆசிய நாடுகளுடன் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை விஸ்தரிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது.

ஐனெயைெ்ழசவள புடழடியட டுைஅவைநன (IPGL) நிறுவனமும் ஈரானின் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைப்பும் இந்த கொடுக்கல் வாங்கலுக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெயிட்டுள்ளன.

இதேவேளை, ஈரானுடன் வர்த்தகக் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளும் எந்தவொரு நாட்டின் மீதும் தடைகள் விதிக்கப்படலாம் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

# அமெரிக்காவின் இராணுவ உதவிகள் உக்ரைனை நோக்கி புறப்பட்டுள்ளன

## அண்டனி பிளிங்கன் தகவல்



அமெரிக்காவின் இராணுவ உதவிகள் தற்போது உக்ரைனை நோக்கி புறப்பட்டுள்ளன என அமெரிக்க வெளியுறவு செயலர் அண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்

உக்ரைனுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டுள்ள அவர் அந்த நாட்டு ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கியிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆயுதங்கள் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நிதியுதவியுடன் கூடிய இராணுவ உதவியில் வான் பாதுகாப்பு இடைமறிப்பான்கள், பீரங்கிகள் மற்றும் நீண்ட தூர துல்லியமான வழிகாட்டுதல் ஏவுகணைகள் ஆகியவை அடங்குகின்றன எனவும் அமெரிக்காவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் அருகே பாரிய ரஷ்ய ஊடுருவலைத் தடுப்பதற்கான போர் இடம்பெறும் நிலையில் அமெரிக்காவின் இராணுவ உதவி உக்ரைனை நோக்கி வருகை தருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி நிர்வாக மறுசீரமைப்புக்கான சுற்றுநிருபம் விரைவில் வெளியாகும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



"கல்வி நிர்வாக சீர்திருத்தத்தின் ஆரம்ப கட்டமாக நாடளாவிய ரீதியில் 1.220 கொத்தணிப் பாடசாலைகள் உருவாக்கப்படுகின்றமையுடன், அவற்றைக் கண்காணிக்க 350 பாடசாலைக் குழுக்கள் உருவாக்கப்படும். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்பித்து அதற்குரிய சுற்று நிருபம் எதிர்வரும் நாள்களில் வெளியிடப்படும்."

– இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கல்வி அமைச்சர் சுசுல் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் கல்வி அமைச்சைப் பொறுப்பேற்ற போது எரிபொருள் வரிசைகளினால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையே காணப்பட்டது. விடைத்தாள்களை திருத்துவோருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான எரிபொருள் கூட இருக்கவில்லை. 14 மணி நேரமும் மின்வெட்டு காரணமாக, பிள்ளைகள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் இருந்தது. இதற்கிடையில் அவ்வப்போது பாடசாலைகளை மூடிவைக்க வேண்டிய நிலைமையும் காணப்பட்டது.

கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டமையால், கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. சரியான நேரத்தில் பரீட்சைகளை நடத்தி பெறுபேறுகளை வெளியிட முடியவில்லை. பின்னர், பொருளாதார நெருக்கடி வலுவடைந்ததால், கல்வித்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

ஆனால், தற்போது நிலைமை சுமூகமாகியுள்ளது. அதன்படி, இந்த ஆண்டுக்கான பாடப்புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் வழமை போல நடத்தப்படுகின்றன. அதற்காக சாதாரண தர பரீட்சையை டிசம்பரிலும், உயர்தர பரீட்சையை ஓகஸ்டிலும் நடத்த வேண்டியுள்ளது. இது தொடர்பில் மாகாண அதிகாரிகளுடனும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளோம்.

கலந்துரையாடலின் போதான யோசனைக்கு அமையவே செயற்பட்டு வருகிறோம். அதன்படி டிசம்பரில் நடக்க வேண்டியிருந்த சாதாரண தர பரீட்சை நாளையுடன் நிறைவுக்கு வருகிறது. அதன் பின்னர் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்படவிருப்பதோடு, உயர்தர பரீட்சைக்கான வகுப்புகளும் ஆரம்பமாகும். இந்த ஆண்டு 452,000 மாணவர்கள் சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 388,000 பேர் முதல், இரண்டாவது அமர்வுக்காக பாடசாலைகளிலிருந்து தோற்றிய மாணவர்களாவர்.

அந்த மாணவர்களுக்கு ஜூன் முதல் வாரத்தில் உயர்தர வகுப்புகளில் இணைய வாய்ப்பு கிடைக்கும். அதற்கு தேவையான அமைச்சரவை அனுமதி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் 15 ஆம் திகதி வெளியிடப்படும். பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் மே மாதம் 20 ஆம் திகதி பாடசாலைகளின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

மேலும், கல்வி நிர்வாக மறுசீரமைப்புச் செயற்பாடுகள் ஆரம்ப கட்டத்தை எட்டியுள்ளோம். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் சுற்றுநிருபம் எதிர்வரும் நாள்களில் வெளியிடப்படும். அதற்கமைய நாடளாவிய ரீதியில் 1,220 கொத்தணிப் பாடசாலைகள் உருவாக்கப்படவுள்ளமையுடன், அவற்றை மேற்பார்வையிடுவதற்காக 350 பாடசாலை சபைகள் உருவாக்கப்படும்.

தற்போதுள்ள 100 கல்வி வலயங்களும் படிப்படியாக அதிகரிக்கப்படும். பாடசாலைள் குழுக்களின் அடிப்படையில், 01 – 11 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளுக்கு மாணவர்களை உயர்தரத்திற்கு உள்வாங்கும் அதிகாரம் அதிகாரிகளுக்கு உள்ளது.

மேலும், இரசாயனவியல்,பௌதீகவியல், உயிரியல், கணிதம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு மொழிப் பாடங்களுக்கான பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வில் பங்கேற்ற 7,000 பேரில் 3,000க்கும் மேற்பட்டவர்களுக்கு பாடப் பொருத்தத்தின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி முடிந்த பின்னர் ஜூன் முதலாம் திகதிக்குள் பாடசாலைகளில் இணைக்கப்படுவர். விஞ்ஞான தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவுக்கு தீர்க்கப்படும். உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் இடைநிறுத்தப்பட்ட மாகாண ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான பிரச்சினைகளும் தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், அதிபர்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதிபர்களின் தொழிற்சங்கங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளது. அதில் அதிபர்களுக்கான கொடுப்பனவுகள், தரம் உயர்த்துதல் மற்றும் ஏனைய சில நடைமுறை விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

மேலும் கல்வி நிர்வாக சேவையில் பல வெற்றிடங்கள் காணப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்களில் 404 பேரை உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வுகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலும், 800 ஆசிரியர் பயிற்றுனர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான இரண்டாவது நேர்முகப் பரீட்சை எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ளது. தேசிய கல்வியியற் கல்லூரிகளை மற்றும் பல்கலைக்கழகங்களாக மாற்றுவது தொடர்பான சட்ட மூலங்களை உருவாக்கும் பணிகளும் நிறைவடைந்துள்ளன." – என்றார்.

# தீவிரமாகப் பரவும் வைரஸ் காய்ச்சல்

இலங்கையில் தற்போது இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதாக பொரளை – சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறும் அவர் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

2 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோரை அதிக அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

காய்ச்சல், இருமல், வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக அரச வைத்தியர்



ஒருவரை நாடுமாறும் பொரளை – சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.



# மட்டு வெல்லாவெளியில் 15 சிறுமியைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த இரு இளைஞர்கள் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பிரதேசத்தில் தனது அம்மம்மா வீட்டிற்குச் சென்று விட்டுத் தனிமையில் வீதியில் திரும்பிக் கொண்டிருந்த 15 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று காட்டுப்பகுதியில் வைத்து பாலியல் துஷ்பிரயோம் மேற்கொண்ட 26 மற்றும் 21 வயதுடைய இளைஞர்கள் இருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தாங்கள் கைது செய்துள்ளனர் என வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 7 ஆம் திகதி தனது வீட்டில் இருந்து அம்மம்மா வீட்டிற்கு சென்று அங்கிருந்து தனிமையில் திரும்பிக் கொண்டிருந்த சிறுமியை காட்டுப் பகுதியை அண்டிய பிரதேசத்தில் வைத்து இரு இளைஞர்கள் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் முறைப்பட்டது. அதையடுத்து அந்தப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்தமையுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதில் கைது செய்தவர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# எழுத்தாளர்களை ஊக்குவிப்பது தொடர்பில் வடக்கு ஆளுநரின் தலைமையில் கலந்தாய்வு

தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் கோரிக்கைக்கு அமைய, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் தலைவர் உள்ளிட்ட குழுவினரும், ஆளுநரின் உதவிச் செயலாளர், உள்ளூராட்சித் திணைக்கள பணிப்பாளர், மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உள்ளூர் எழுத்தாளர்களின் தற்போதைய நிலைமை, பதிப்பகங்கள், அச்சகங்களின் செயற்பாடுகள், நூல் பதிப்பு மற்றும் விற்பனை, கலை, இலக்கியத் துறையின் சமகாலப் போக்கு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.




உள்ளூராட்சி அமைப்புகள், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி திணைக்களங்கள் தம்மிடம் காணப்படும் நிதியில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இதன்போது ஆளுநர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதேவேளை, தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பை வடக்கு மாகாணம் முழுவதும் செயற்படும் வகையிலாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் தெரிவித்தார். உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதைப் போல, கலைகளையும் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளுநர் குறிப்பிட்டார். திறந்தவெளி அரங்குகளில் உள்ளூர் கலைகளை மேடையேற்றி அவற்றை அழிந்திடாமல் பாதுகாத்து புத்துயிர் வழங்க மாகாண கலாசார திணைக்களத்திற்குத் தாம் அறிவுறுத்தியுள்ளார் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

# நினைவேந்தலை அடக்கினால் மீண்டும் இருண்ட யுகமே வரும்

## ரெலோ பிரமுகர் சபா குகதாஸ் எச்சரிக்கை

உயிரிழந்த உறவுகளை நினைவு கூருகின்ற நினைவேந்தலை அடக்கினால் இந்த நாட்டில் மீண்டும் இருண்ட யுகம் உருவாகும் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ பிரமுகருமான சபா குகதாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நினைவேந்தலுக்கு எதிராக அரச படைகள் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்துக் கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ள அவர் இத்தகைய நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தமிழர்கள் மீது சிங்கள ஆட்சியாளர்கள் ஏவி விட்ட வன்முறையும் அதனால் ஏற்பட்ட பாரிய இனவழிப்பும் முழு நாட்டையும் அதள பாதாளத்தில் தள்ளியிருக்கின்றது.

வாக்களித்த சொந்த மக்களாலேயே வரலாற்றில் ஒரு ஜனாதிபதி ஓட ஓட துரத்தப்பட்டமையைப் பேரினவாத ஆட்சியாளர்கள் சிறிது காலத்தில்



மறந்து விட்டார்கள் என்பதை மீண்டும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப் பட்டுள்ள வன்முறைகள் காட்டுகின்றன.

முள்ளிவாய்க்கால் இனவழிப்புப் போரில் ஐந்து மாதங்கள் உணவு விநியோகத்தை முற்றாகத் தடுத்து, அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளைப் பட்டினிக்கும் நோய் வாய்ப்பிற்கும் உட்படுத்தி, இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொண்டு, கொன்றொழித்து, அதனை வெற்றி விழாவாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

சில ஆண்டுகளில் முழு நாட்டையும் பிச்சை ஏந்த வைத்த வரலாற்றை மறந்து மீண்டும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உறவுகளை நினைத்து மேற்கொள்ளும் நினைவேந்தல்களை தடுத்தல், அவற்றில் பங்கு கொள்பவர்களை கைது செய்தல், சிறைப் பிடித்தல. போன்றவை மீண்டும் இந்த நாட்டை ஓர் இருண்ட யுகத்திற்குக் கொண்டு செல்லும் என்பதை ஆட்சியாளர்கள் மறந்து விடக் கூடாது.

இலங்கைத் தீவின் மீள் எழுச்சி என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படுவதன் மூலமும் தேசிய இனப் பிரச்சினைக்கு பொருத்தமான அரசியல் தீர்வு வழங்குவதன் மூலமுமே வெற்றி பெறும். இல்லையேல் மீண்டும் மீண்டும் இருண்டயுகம் தான். – என்றார்.

# அடிப்படை மனித உரிமையான நினைவேந்தலைத் தடுப்பது சிங்கள, பௌத்த பேரினவாத ஒடுக்குமுறைத் திமிர்த்தனமே!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் செந்திவேல் கடும் கண்டனம்

திருகோணமலை சம்பூரில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பகிர்ந்தவர்கள் தாக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டமைக்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. இதை ஒட்டி அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்ட ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்களின் வருடாந்த நினைவஞ்சலியின் அடையாளமாக வழங்கப்படுவதே முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியாகும். திருகோணமலை – சம்பூரில் அக் கஞ்சியைக் காய்ச்சிக் கொண்டிருந்த பெண்கள் மீது பொலிஸ் தாக்குதல் நடாத்தி அராஜகம் புரிந்து, கைது செய்துள்ள சம்பவம் பேரினவாத பொலிஸ் அடாவடித்தனமாகும். இதுவும் தொடரும் பேரினவாத பொலிஸ் அடக்கு முறையின் தொடர்ச்சிதான். இத்தகைய பொலிஸ் வன்முறைச் செயல்கள் வன்மையாகக் கண்டித்து எதிர்க்கப்பட வேண்டியவையாகும்.



இச்சம்பவத்தை ரணில் – ராஜபக்ஷ ஆட்சி கண்டும் காணாதமை போன்று இருந்து வருவது தொடரும் பொலிஸ் அராஜகத்திற்கு மௌன அங்கீகாரம் வழங்குவதாகும்.

திருகோணமலை – சம்பூரில் பொலிஸார் நடத்திய பெண்கள் மீதான தாக்குதலையும் கைதையும் எமது கட்சி வன்மையாகக் கண்டித்து எதிர்க்கின்றது.

முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் என்பது ஒரு கட்சிக்கு அல்லது ஓர் இயக்கத்திற்கு உரிய நிகழ்வு அல்ல. ஒட்டு மொத்தமாக முப்பது வருட காலத்தில் இடம் பெற்ற பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்திலும், அதன் உச்சநிலை அழிப்பான முள்ளிவாய்க்காலிலும் அழிக்கப்பட்ட பல லட்சம் தமிழ் மக்களுக்கான துயர் மிகுந்த நினைவேந்தலாகும். இழந்த தமது அன்புக்குரிய உறவுகளை நினைவு கூர்ந்து கொள்ளும் உரிமையும் கடமையும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உரிய அடிப்படையான மனித உரிமையாகும். அதில் தலையிடுவதற்கும், அச்சுறுத்திக் குழப்புவதற்கும் பொலிஸாருக்கோ இராணுவத்தினருக்கோ எவ்வித நியாயப்பாடும் இருக்க முடியாது. அதற்கு அப்பால் அவர்கள் தலையிட்டுக் குழப்புவதும், பலவந்தம் செய்வதும், கைது செய்வதும் போன்ற செயற்பாடுகள் சிங்கள, பௌத்த பேரினவாத ஒடுக்கு முறைத் திமிர்த்தனத்தின் வெளிப்பாடுளாகும். இவை போன்ற அடாவடித்தன செயற்பாடுகளைஅனைத்து மக்களும் கண்டித்து, எதிர்த்து நின்று தமது நினைவேந்தல்களை முன்னெடுக்க வேண்டும் என்பதையே எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்துகின்றது. – என்று உள்ளது.



# மட்டக்களப்பு பொத்தானையில் ரயிலுடன் மோதிய மோ.சைக்கிள்



## படுகாயங்களுடன் ஒருவர் ஆஸ்பத்திரியில்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொத்தானை பிரதேசத்தில் நேற்று ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் படுகாய மடைந்தார். அவர் பின்னர் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டார்.

அந்தப் பிரதேசத்தின் வீதியை ஊட றுத்துச் செல்லும் ரயில் தண்டளாத்தில் நேற்றுக் காலை மாடு மேய்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற 38 வய துடைய ஆண் ஒருவர் ரயில் தண்ட வாளத்தை கடக்கும் போது எதிரே வந்த ரயில் மோதி படுகாயமடைந் தார். அவர் பின்னர் வைத்தியசாயில் சேர்க்கப்பட்டார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.



# 1,700 ரூபா சம்பளம் தொடர்பான வர்த்தமானி குறித்து தோட்ட நிறுவனங்களிடமிருந்து முறைப்பாடு இல்லை

## தொழில் திணைக்களம் தெரிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்க ளுக்கு 1,700 ரூபா சம்பளத்தை வழங் குவது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி குறித்து பெருந்தோட்ட நிறுவனங்களிடமிருந்து இதுவரை யில் எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என தொழில் திணைக்களம் தெரிவித்தது.

கடந்த 30 ஆம் திகதி நள்ளி ரவு வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் ஆட்சேபனை தெரிவிக்கும் காலம் இன்றுடன் நிறைவடைகின் றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்க ளுக்கு 1,700 ரூபா நாளாந்த சம்ப ளத்தை வழங்கும் வகையில், தொழில் ஆணையாளரால் கடந்த 30ஆம் திகதி வர்த்தமானி வெளியிடப்பட் டது.

இந்த வர்த்தமானி தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களிடமி ருந்து இதுவரையில் எவ்வித முறைப் பாடுகளோ, ஆட்சேபனைகளோ கிடைக்கவில்லை என தொழில் திணைக் களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தமானியில் அறிவிக்கப்பட் டுள்ள 1700 ரூபா தொடர்பிலான, ஆட்சேபனைகள் அல்லது எதிர்ப்பு களைத் தெரிவிக்கும் கால அவகா சம் இன்று நிறைவடைந்த பின்னர், அது தொடர்பிலான அறிக்கையை தொழில் அமைச்சருக்கு சமர்ப்பிக்க வுள்ளதாகவும் தொழில் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும், இது தொடர்பிலான இறுதி தீர்மானத்தை அமைச்சரே எடுப்பார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று வரை பெருந்தோட்ட நிறு வனங்களிடமிருந்து எவ்வித ஆட் சேபனைகளோ எதிர்ப்புகளோ தெரி விக்கப்படாதபட்சத்தில், சம்பளம் தொடர்பில் தொழில் அமைச்சர் தீர் மானமொன்றை எடுப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

2009 ஆண்டு சிறிலங்கா படைத் தரப்புக்களால் முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட தமிழினப்படு கொலையை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட நுழை வாயிலில் இடம்பெற்றது.

இறுதிக்கட்டப் போரின் போது தமிழ் மக்களின் உயிர்காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்களினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# கட்சி செயற்பாடுகளில் ஈடுபட தடை ஏற்படுத்த வேண்டாம்!

## துமிந்த திசாநாயக்க மனுத் தாக்கல்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளர் நிமல் சிறிபால டி சில்வாவிற்கும் பதில் செயலாளர் துமிந்த திசாநாயக்கவிற்கும் கட்சியின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தடை ஏற்படுத்த வேண்டாம் என உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தவிசாளராகத் தேர்வு செய்யப்பட்டார் என மைத்திரிபால தரப்பினால் அறிவிக்கப்பட்ட அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கட்சியின் செயற்பாடுகளில் தாம் ஈடுபடுவதற்குத் தடையேற்படுத்துவதை தவிர்க்குமாறு உத்தரவிடக் கோரி கடுவலை மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்து சில தரப்பினருக்கு எதிராக நேற்று முன்தினம் தடையுத்தரவு பெற்றிருந்தார்.

துமிந்த திசாநாயக்கவின் மனு கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் விதானகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இருதரப்பு சட்டத்தரணிகளும் தமது வாதங்களை முன்வைத்தனர்.

விஜேதாச ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக இந்தத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், சரத் ஏக்கநாயக்க, விஜேதாஸ ராஜபக்ஷ, கீர்த்தி உடவத்த, நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டம் என்ற பெயரில் நடத்தப்பட்ட கூட்டத்தில், விஜேதாஸ ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக நியமிக்கப்பட்ட போதிலும் அந்த கூட்டம் சட்டபூர்வமானதல்ல என துமிந்த திசாநாயக்கவின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 16 ஆம் சரத்திற்கமைய, தமக்கு உரிமை உள்ளதாகவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், விஜேதாஸ ராஜபக்ஷ சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, அடிப்படை ஆட்சேபனைகளை தெரிவித்தமையுடன், மனு மீதான பரிசீலனையை தொடர அனுமதிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்.

எனினும், மனு மீதான விசாரணையை தொடர அனுமதிக்க வேண்டும் என மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சந்தன ஜயசுந்தர வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கருத்தில் கொண்டு, மனுவை தொடர அனுமதிப்பதா, இல்லையா என்பது குறித்து இன்று உத்தரவு பிறப்பிக்கப்படும் என மாவட்ட பிரதம நீதிபதி தெரிவித்தார்.

### சம்பூரில் கஞ்சி பரிமாறிய நால்வர் கைது:

# நினைவுகூர்தல் உரிமையை உறுதிப்படுத்துமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குக் கடிதம்

திருகோணமலை – சம்பூரில் கஞ்சி பரிமாறிய நால்வர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கத்தினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

சம்பூர் கைது தொடர்பில் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தரிந்து ஜயவர்தன, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.ரி.பி. தெஹிதெனியவிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நினைவுகூர்தல் உரிமையை உறுதி செய்யுமாறு கடந்த 2016 ஆம் ஆண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ள பின்னணியிலேயே பொலிஸார் இவ்வாறான நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்று அமைதியாக இடம்பெறும் நினைவேந்தல்களை தடுத்து வருகின்றனர் என இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் சர்வதேச சிவில், குடியியல் உரிமைகள் தொடர்பிலான இணக்கப்பாட்டு சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளார்களா என விசாரிப்பதாகக் கூறி விளக்கமறியலில் வைப்பதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் எடுத்துள்ளனர் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நினைவுகூர்தல் என்பது அனைவருக்கும் உரித்தான உரிமை என்பதுடன், தெற்கிலும் பல்வேறு நினைவேந்தல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெறும் நினைவேந்தல்களுக்கு பொலிஸார் இவ்வாறாக தடை ஏற்படுத்துவதானது நினைவுகூர்தல் உரிமையை தடுப்பதுடன், அரசின் நல்லிணக்கம் தொடர்பிலான தூர நோக்கு எவ்வாறு உள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பூர் சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணையை ஆரம்பிக்குமாறு பொலிஸ்மா அதிபர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு, சட்டமா அதிபருக்கு பரிந்துரை செய்வதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நினைவுகூர்தல் உரிமையை உறுதி செய்யும் நோக்கில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் பொருத்தமான பரிந்துரைகளை முன் வைக்குமாறும் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தரிந்து ஜயவர்தனவினால் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை – சேனையூரில் கஞ்சி பரிமாறிய நால்வர் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டு, மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்து, எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# கெஹலியவின் பிணை மனு மே 31ஆம் திகதி பரிசீலனை

## மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு



முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கு பிணை கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுவை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் பி. சஷி மகேந்திரன் ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தரமற்ற நோயெதிர்ப்பு தடுப்பூசிகளை நாட்டின் வைத்தியசாலைகளுக்கு விநியோகித்தமை தொடர்பான வழக்கில் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட விளக்கமறியல் உத்தரவை வலுவிழக்கச் செய்ய எழுத்தாணை கட்டளையை பிறப்பிக்குமாறே கோரியே அந் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் தமக்கு பிறப்பிக்கப்பட்ட விளக்கமறியல் உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறு சுகாதார அமைச்சின் மருந்து விநியோக பிரிவின் முன்னாள் பணிப்பாளர் டொக்டர் கபில விக்ரமநாயக்கவும் எழுத்தாணை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் மாளிகாந்த நீதிவான் உள்ளிட்டோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.



# சாதாரண தர பெறுபேறுகளுக்கு முன்னதாக உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க அனுமதி

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகுவதற்கு முன்னதாகவே உயர்தரத்திற்கான வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைவாக அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

தற்போது கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி வரும் மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகளை எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய திட்டத்திற்கு மாகாண ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகளின் அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், கல்வி பொதுத்தராதர சாதாரண தரம் வரை மாத்திரம் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற பாடசாலைகளின் மாணவர்களை உயர்தரத்திற்காக அருகிலுள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்புகள் நடத்தப்பட்டாலும், குறிப்பிட்ட பாடத்திட்டம் உரிய பாடசாலையில் கற்பிக்கப்படாவிடின், அப்பாடத்திட்டம் கற்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியில் பாடசாலைகள் மூடப்பட்டமையினால், தவறவிடப்பட்ட கல்வி நடவடிக்கைகள் மற்றும் பாடசாலை பரீட்சை அட்டவணைகளை வழமைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு அமையவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்னர் தெரிவித்திருந்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.05.2024




உங்கள் புத்திசாலித் தனத்தை வளர்த்து அதன் மூலம் பிரகாசிக்கலாம். கலை மற்றும் இசை போன்றவற்றில் ஈடுபட்டு பயனடையலாம். உங்கள் வளர்ச் சிக்கு இன்றைய நாளை பயன்படுத்த லாம். இன்று அதிக முயற்சி எடுத்து அதிக பலன் பெறும் நாள்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப்படும். புதிய விஷ யங்களை கற்றுக்கொள்வீர்கள். பணி நிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் பழகும் போது நகைச்சுவை உணர்வு வெளிப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் தேவையைக் காட்டிலும் அதிக மாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள். சுய வளர்ச்சி உங்களுக்கு வழி காட்டும். பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் திறமை உங்கள் பணியில் வெளிப்படும். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும் நல்ல வாய்ப்பு இன்று காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாகப் பழகுவீர் கள். இதனால் அவர் உங்களை நன்கு புரிந்துகொள்ள உதவும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங் களால் சேமிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சாதகமான நாள் அல்ல. மன உளைச்சலை சமாளிக்க அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் விருப்பங் களை அடைவதற்கு ஏதோ ஒன்று குறைவது போல உணர்வீர்கள்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு சரியாக திட்டமிட வேண்டியது அவசியம். உங்களின் பாதி வேலை முடியும், இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் உறவு செழித்து வளர உங்கள் சஞ்சலமான மனது உகந்ததல்ல. உங்கள் துணையிடம் உங்கள் உள்ளத்தை வெளிபடுத்த முடியாது. இன்று அனுசரணை தேவை.

பணம் இன்று குறைந்து காணப்படும். பண வரவு காணப்பட்டாலும் அதில் திருப்தி இருக்காது. பண இழப் பிற்கான வாய்ப்பு உள்ளது.

தொண்டை சம்பந்தமான ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று விரைவான முடிவுகள் எடுப் பதை தவிர்க்க வேண்டும். இதனால் நல்ல வாய்ப்புகளை இழக்காமல் தடுக்க லாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத் தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையைத் தரும். உங்கள் சக பணியாளர்களிடமி ருந்து சில தடைகளை எதிர்கொள்ள நேரும்.

எளிய விஷயங்களையும் இன்று கடுமையாக உணர் வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பாரமரிக்க உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். சகஜமாக இல்லாவிட்டால் திருப்தி கிட்டாது.

தேவையற்ற செலவுகளால் உங்கள் பணம் கரையும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே உள்ளது.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்க வேண்டும் எனில் உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை. பாடல்கள் கேட்பது, திரைப்படம் பார்ப்பது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். இதனால் செய்த வேலையையே திரும்ப செய்ய நேரும்.

தகவல் பரிமாற்றத்தில் சில குழப்பங்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கடுமையாக உணர்வு களை வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். விட்டுக் கொடுப்பதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைக்க லாம்.

நிதியைப் பொறுத்தவரை உங்கள் எதிர்பார்ப்பு அதிக மாக இருக்கும். ஆனால் அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.




இன்றைய நாள் அபாரமாக இருக்கும். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் நெருங்கியவர்களின் இதயத்தை தொடுவீர்கள். உங்களின் தன்னம் பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் பணி செய்யும் முறையை மேம்படுத்துவீர்கள். சக பணியாளர்களுக்கு உதாரண மாகத் திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதி காரிகளால் பாராட்டப்படும்.

வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் உங்கள் துணையை மகிழ்ச்சிப்படுத்தலாம். நீங்கள் பொருத்தமான ஜோடிக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

இன்று வரவு அதிகமாக காணப்படும். இன்று சுதந் திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கி யிருப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

நீங்கள் தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை ஆக்க பூர்வமான நாளாக ஆக்கலாம். உறுதி மற்றும் முறையான திட்டமிடல் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம். இன்றைய நாள் பயனுள்ளதாக அமை யும்.

இன்று பணியிடத்தில் அபாரமான வெற்றி கிடைக்கும். உங்கள் பணியில் கூடுதல் பலன்களும் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக இருப் பீர்கள். தகவல்களை சிறந்த முறையில் பரிமாற்றம் செய்வீர்கள். உங்கள் வசீகரமான பேச்சு உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யும்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. புதிய முத லீடுகளும் பயன் தரும்.




இன்று சவால்கள் மிகுந்த நாள். எனவே அமைதியாக எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று சூழ்நிலைகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று திட்டமிட்டு தொழில் சார்ந்த முறையில் பணி யாற்றினால் சிறந்தது.

மனதில் கவலை தரும் எண்ணங்களை வளர்ப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இந்த உணர்வை தவிர்த்தல் வேண்டும்.

பண வரவு திருப்திகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் வருத்தப்படுவீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்படலாம். இசையை கேட்பதன் மூலம் அல்லது தியானம் மூலம் அமைதி பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.05.2024




இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் ஆர்வம் குறையும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். முடிவெடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும்.

பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். பணிச் சுமை அதிகமாக காணப்படும். உங்களை தயார் படுத்திக் கொள்வதன் மூலம் வெற்றியை அடையலாம்.

உங்களின் மாறுபடும் மன நிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வை தவிர்த்து அமைதியாக இருங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். பணம் சேர்ப்பதற்கு தடைகள் காணப்படும்.




உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் இன்று உற்சாகம் காணப்படும். மகிழ்ச்சியாக இருக்க இது ஒரு நல்ல வாய்ப்பு. முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் வெற்றியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். அவர்களின் முழு ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறையால் உங்கள் பிரியமானவர் மகிழ்ச்சியடைவார்.

இன்று உங்கள் பணத்தேவைகள் பூர்த்தியடையும் நாள். இன்று உங்களுக்கு பெரிய அளவில் பணம் கிடைப்பதற்கான அதிர்ஷ்டமான நாள்.




இன்று அமைதி நிலவும் நாள். உங்களை நிரூபிக்க வாய்ப்பு கிடைக்கும் நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். திறமையுடன திட்டமிட்டு உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

காதல் வயபட்ட உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் பிரியமானவர் உங்களை நேசிப்பார்.

உங்கள் பணம் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இன்று செழிப்பான நிலை காணப்படும்.

இன்று உங்களுக்கு தேவையான ஆற்றல் காணப்படும்.




இன்று முக்கிய முயற்சிகள் கூட சிறந்த பலன்களை அளிக்காது. நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள். பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் ஏமாற்றத்தைக் காண்பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை முடிப்பதற்கு கவனம் செலுத்துங்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனை தவிர்த்து நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் அதிகம். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். நிதி நிலைமை செழிப்பாக இருக்காது.

அதிக மன உளைச்சல் காரணமாக நீங்கள் சோர்வாக காணப்படுவீர்கள். தொடை வலியால் அவதிப்படுவீர்கள்.







# புதிய அரசியல் கூட்டமைப்பை ஸ்தாபிக்கத் திட்டம்: நிமல் சிறிபால தரப்பு நிமல் லன்சா அணியுடன் பேச்சு

புதிய அரசியல் கூட்டமைப்பை ஆரம்பிப்பது தொடர்பான தீர்மான மிக்க கலந்துரையாடல் மெதிவெல பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் நேற்று நடைபெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா தரப்பினருக்கும் நிமல் லன்சா தலைமையிலான புதிய கூட்டணியின் தலைவர்களுக்கும் இடையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இரண்டு தரப்புகளையும் சேர்ந்த 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா தரப்பினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் புதிய கூட்டணியை சேர்ந்த அனுர பிரிய தர்ஷன யாப்பா, நிமல் லன்சா, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சர் நளின் பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர்களான பியங்கர ஜயரத்ன, உதயகாந்த குணதிலக்க, சுதத் மஞ்சுள, நிமல் பியதிஸ்ஸ, முஷாரப் முது நபீன், இஷாக் ரஹ்மான் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கூட்டணியின் வழிநடத்தல் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா செயற்படுகின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன், அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார, நாடாளுமன்ற உறுப்பினர்களான துமிந்த திசாநாயக்க, வீரகுமார திசாநாயக்க ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.

புதிய அரசியல் கூட்டமைப்புக்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்காலத்தில் அம்பாந்தோட்டையில் பொதுக்கூட்டமொன்றை நடத்தவும் இதன்போது திட்டமிடப்பட்டுள்ளது.

# சப்ரகமுவ மாகாண வைத்தியசாலைகளில் 72 தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பு

தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார துறையின் 72 தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த பணிப்பகிஷ்கரிப்பு நேற்று சப்ரகமுவ மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதமே பணிப்பகிஷ்கரிப்பிற்குக் காரணம் என சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சப்ரகமுவ மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை கடந்த வியாழக்கிழமை வட மத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் அமைச்சரவையில் யோசனை முன்வைப்பு

நாட்டிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்தும் யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி அமைச்சும், சமூக வலுவூட்டல் அமைச்சும் இணைந்து சம்பந்



தப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்துள்ளன.

இதேவேளை, இலங்கை வரலாற்றில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஓய்வூதியம் வழங்குவது குறித்த யோசனை முன்வைக்கப்படுகின்றமை இதுவே முதன்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.